தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1975 நவம்பர் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

Tirunelveli-Kanniyakumari Railway Line

* 3. S.N. Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Public Works be pleased to state:

(*a*) whether the execution of Tirunelveli-Kanniyakumari Railway work has been suspended by the Central Government? and

(*b*) if so, what action has been taken by this Government to insist upon the Central Government to expedite the execution of the Tirunelveli–Kanniyakumari district Railway work?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு திருநெல்வேலி—கன்னியாகுமரி இரயில்வே லைன் போடுவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்? இந்த 'ரேட்'டிலே போனால் எந்தக் காலத்தில் அந்த இரயில்வே லைன் வேலை பூர்த்தியாகும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆண்டு எவ்வளவு பணம் ஒதுக்கி இருக்கிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. இதுவரை 700 இலட்ச ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி—கன்னியாகுமரி இரயில் பாதை அமைக்கும் வேலை 1980-ஆம் ஆண்டு முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1975 நவம்பர் 11

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, திருநெல்வேலி—கன்னியாகுமரி இடையே இரயில் பாதை அமைப்பதற்கு மொத்த மதிப்பீட்டு தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1972 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 14.54 கோடி ரூபாய்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இதுவரையிலும் என்ன என்ன வேலைகள், இரயில் பாதை அமைப்பது சம்பந்தமாக முடிவுற்றிருக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாலங்களைப் பொறுத்த வரையில், 671 பாலங்கள் கட்டப்பட வேண்டியவற்றில், 200 பாலங்கள் கட்டிமுடிக்க பெற்று, 245 பாலங்கள் கட்டப்பட வேண்டியிருக்கின்றன. மீதமிருக்கும் பாலங்கள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. மண் வேலை இன்னும் முடிவடையவில்லை. தண்டவாளம் அமைக்கும் வேலை இன்னும் நடக்கவில்லை. நிலம் கையகப்படுத்தப்படுவதைப் பொறுத்து, யார் யார் சொந்தக்காரர்களோ அவர்களுக்கு எழுதப்பட்டு, நிலம் கையகப் படுத்தும் வேலை—ஆர்ஜித வேலை—குறித்து நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : 1972-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி 14 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். 1980-ஆம் ஆண்டில் வேலை முடியும் என்றும் சொன்னார்கள். இன்றிருக்கும் விலைவாசியைப் பார்க்கும்போது, 1960-இல் கிட்டத்தட்ட இந்த மதிப்பீடு ரூ. 20 கோடிக்குப் போகக்கூடும். ஆகவே, மத்திய அரசுக்கு இதை எடுத்துச்சொல்லி, 1980-இல் நிச்சயமாக இந்த திருநெல்வேலி-கன்னியாகுமரி இரயில்பாதை அமைக்கும் வேலை முடிய ஆவன செய்யப்படுமா? நில ஆர்ஜிதம் கூட இன்னும் நடைபெறவில்லை. உடனடியாக நம்முடைய அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி அதிகமாகப் பணம் கேட்டுப்பெற்று, இந்த வேலையை எடுத்துக் கொள்ள முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நில ஆர்ஜித வேலை நடைபெறவில்லை என்று நான் சொல்லவில்லை. நில ஆர்ஜித நடவடிக்கை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த

வேலை சீக்கிரம் முடிவடையும் என்று நம்புகிறேன். 1972-ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ. 14.54 கோடி என்றாலும், 1980-ஆம் ஆண்டில் எவ்வளவு பணம் செலவிடவேண்டியிருந்தாலும், அதை மத்திய அரசுதான் ஏற்றுக்கொண்டு வேலையைச் செய்து முடிக்கவேண்டும்; செய்வார்கள் என்று நம்புகிறேன். நிச்சயம் நடைபெறும்.

Prohibition Enforcement Committees

* 276 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Government have constituted Committees at State and District levels to enforce Prohibition in this State; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, சென்னை மாநிலத்தில் மது விலக்கு அமலில் இருந்தாலும், இங்கேதான் அதிகமாக கள்ளச் சாராயம் இருக்கிறது என்று பாரதப் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறாரே, அதைப் பற்றி சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அவர்களுக்கு பதில் ஏதாவது அனுப்பப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பாரதப் பிரதமர் அப்படி எப்பொழுது குறிப்பிட்டார் என்று எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தகவலைத் தெரிந்து வெளியிடுவார்களானால் நலமாக இருக்கும். கள்ளச் சாராய வியாபாரிகளையெல்லாம் 'மிஸா'வின்கீழ் கைது செய்தபோது, அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று மத்திய அரசு ரொம்ப அக்கறையோடு உத்தரவு பிறப்பித்தது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : தலைவர் அவர்களே, மது விலக்குக் கொள்கையினை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு கிராமந்தோறும் மது விலக்குக் குழுக்கள் அமைத்து, அந்தக்